අග්‍රාමාත්‍ය කාර්යාලය
பிரதம அமைச்சரின் அலுவலகம்
PRIME MINISTER'S OFFICE

Presidential Task Force for Essential Services
58, ශ්‍රීමත් අර්නස්ට් ද සිල්වා මාවත, කොළඹ 07.
58, ஸ்ரீமத் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை, கொழும்பு 07.
58, Sir Ernest de Silva Mawatha, Colombo 07.

මගේ අංකය / எனது குறிப்பு / My Ref. PTF/01/Circular/01 | ඔබේ අංකය / உமது குறிப்பு / Your Ref. | දිනය / திகதி / Date 2020.04.15

சுற்றறிக்கை இலக்கம்: PTF/03/2020 (ii)

அனைத்து மாவட்டச் செயலாளர்கள் மற்றும்
அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும்

<u>**தற்போது ஏற்பட்டுள்ள பேரிடர் நிலைமை காரணமாக சமூக நன்மைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காத்திருப்புப் பட்டியலில் உள்ள பயனாளிகளுக்கு ரூ.5000/- கொடுப்பனவைச் செலுத்துதல்.**</u>

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள PTF/03/2020 ஆம் இலக்க, 2020.03.31 ஆந் திகதிய மற்றும் PTF/03/2020(i) ஆம் இலக்க, 2020.04.03 ஆந் திகதிய சுற்றறிக்கைகளுக்கு மேலதிகமாக இது வெளியிடப்படுகிறது.

02. நாட்டினுள் தொடர்ச்சியாக ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுகின்றமையினால், பெரும்பாலான குடும்ப அலகுகள் நாளாந்த வாழ்வாதாரங்களை இழந்து, வாழ்வதற்கான வழியின்றி ஆதரவற்ற நிலைமைக்கு உட்பட்டுள்ளமையினால், அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, அவர்களுக்கு உத்தேச ரூ.5000 கொடுப்பனவை மிகவும் துரிதமாகச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இப்பணியை மிகவும் குறுகிய காலத்தினுள் செய்வது கடினமாயினும், அவ்வாறான நிலைமையிலும் கடுமையான முயற்சியுடன் மக்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணங்களைத் தாமதமின்றி வழங்குவதற்கு ஆவண செய்வது மிகவும் வரவேற்கத்தக்கது.

எனினும், இப்பணியை உயர்ந்தபட்ச வெளிப்படைத்தன்மையுடனும், நியாயமாகவும் மேற்கொள்ளவும், கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகுதியான அனைத்துக் குடும்ப அலகுகளுக்கும் அந்தப் பயனை வழங்கவும், தகுதி பெறாத குடும்ப அலகுகளுக்கு அந்தப் பயன் செலுத்தப்படுவதனைத் தவிர்ப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. PTF/03/2020/(i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் (03) ஆம் பந்திக்கு ஏற்ப, இந்த பயன்களை வழங்குவதற்காகத் தயாரிக்கப்பட்ட காத்திருப்புப் பட்டியல்களில் 1.9 மில்லியனுக்கு மேற்பட்ட குடும்ப அலகுகள் உள்ளடங்கியுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது. எனவே, காத்திருப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பயனாளிகளை மீண்டும் மீளாய்வு செய்து, தகுதியற்ற குடும்ப அலகுகள் காத்திருப்புப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருப்பின், அவர்களைக் காத்திருப்புப் பட்டியலிலிருந்து நீக்குவதற்கும், நிலவும் நிலைமை காரணமாக உண்மையாகவே வாழ்வாதாரத்தை இழந்துள்ள, இந்தப் பயன்களை வழங்கும்போது முன்னுரிமை வழங்க வேண்டிய மற்றும் ஏலவே காத்திருப்புப் பட்டியலில் உள்ளடக்கப்படாத, எனினும்,உள்ளடக்கப்பட வேண்டிய குடும்ப அலகுகள் காணப்படின், அவ்வாறான


සාමාන්‍ය කාර්යාලය / பொது அலுவலகம் / Gen. Office 2575317 2575318 | ෆැක්ස් / பெக்ஸ் / Fax 2574143 2575454 2575310 | විද්‍යුත් තැපෑල / ஈ மெயில் / E-mail secpm@pmoffice.gov.lk

குடும்ப அலகுகளைப் பட்டியலில் இணைத்து முன்னுரிமை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதற்கேற்ப, ஏலவே காத்திருப்புப் பட்டியலில் உள்ள அனைத்து குடும்ப அலகுகளும் இணைப்பு (01) மாதிரி ஊடாக கிராமியக் குழுவுக்குப் பயன்களைப் பெற்றுக்கொள்வதற்காக கோரிக்கையொன்றை முன்வைக்க வேண்டும். அதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களின் உள்ளூராட்சி வட்டாரப் (Ward) பிரதிநிதிகளுக்கு மேலதிகமாக, அந்த உள்ளூராட்சி நிறுவனத்தின் எந்தவொரு பிரதிநிதிக்கும்/ எந்தவொரு அரசியல் கட்சியின் பிரதிநிதிக்கும்/ எந்தவொரு சிவில் அமைப்பின் பிரதிநிதிக்கும் இந்தக் கிராமியக் குழுவுக்கு ஏதாவது குடும்ப அலகொன்று பயன்களைப் பெற்றுக்கொள்ள தகுதி பெறுகின்றமை/ பெறாமை தொடர்பாகவும், முன்னுரிமை வழங்குவது தொடர்பான விடயங்களையும் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். அவ்வாறு முன்வைக்கப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு, கிராமியக் குழு பொருத்தமான பயனாளிகளைத் தெரிவுசெய்து, விதந்துரைகளுடன், அந்தப் பயனாளிக் குடும்ப அலகுகளின் பெயர்ப் பட்டியலைப் பின்வரும் மாதிரி மூலம் பிரதேச செயலாளருக்கு 2020.04.19 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

**தெரிவுசெய்யப்பட்ட பயனாளிக் குடும்ப அலகுகள் தொடர்பான விபரம்**

கிராம உத்தியோகத்தர் பிரிவு:

| தொடர்.இல. | வீட்டு இலக்கம் | பெயர் | தேசிய அடையாள அட்டை இலக்கம் | விதந்துரை | ஏனையவை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

மேற்குறிப்பிட்ட பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து குடும்ப அலகுகளும் ரூ. 5,000 கொடுப்பனவு வழங்குவதற்குத் தகுதியானவை என இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

குழு அங்கத்தவர்கள்

1.
2.
3.
4.
5.
6.

திகதி :

அத்துடன், பயனாளிகள் என்ற வகையில், நிராகரிக்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை, மேற்குறிப்பிட்டவாறே தயாரித்து, கிராமியக் குழுவின் விதந்துரையுடன் கிராம உத்தியோகத்தர்/ சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தம்மிடம் வைத்திருக்க வேண்டும்.

03. இந்தப் பயன்களைச் செலுத்தும்போது பின்வரும் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குடும்ப அலகுகளையும் நிலவும் நிலைமை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த பிரிவினராக இனங்காண முடியும். அந்தக் குடும்ப அலகுகளைத் தெரிவுசெய்யும்போது மேலே (02) ஆம் பந்தியின் விபரிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும்.

3.1 **கட்டுமானத் துறைக்கு ஏற்புடைய சேவைகளை வழங்கும் பிரிவினர்**

உதாரணமாக, கட்டுமானக் கைத்தொழிலுக்கு செங்கல், மணல் போன்ற மூலப்பொருட்களை வழங்குவோர் மற்றும் தச்சு வேலை, கட்டுமான வேலை, குழாய் வேலை, மின்னியல் வல்லுநர், பூச்சுவேலை போன்ற தொழில்களில் ஈடுபட்ட நபர்கள் மற்றும் அந்தப் பணிகளுக்கான கைவேலையாட்கள் போன்ற தொழில்களில் ஈடுபடுவோர்

3.2 **கைத்தொழில் துறையில் ஈடுபடுவோர்**

உதாரணமாக, இனிப்புப் பண்டங்கள் கைத்தொழில், தும்பு, கால் துடைப்பான் கைத்தொழில், நினைவுப்படிகம், மெழுகு அச்சு (பதிக்), உலோகம் போன்ற சிறியளவிலான கைத்தொழிலாளர்கள்

**3.3** **பிரதேச மற்றும் கிராமிய மட்டத்தில் சேவைகளை வழங்குவோர்**

உதாரணமாக, அழகு நிலையங்கள், வைபவங்களுக்கான பொருட்கள், உபகரணங்கள் மற்றும் சேவைகளை வழங்குவோர், முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் பழுதுபார்ப்போர், ஆடை தைப்பவர்கள், முடி திருத்துவோர், முச்சக்கரவண்டிச் சாரதி போன்ற தொழில்களில் ஈடுபடுவோர்

3.4 **கிராமியரீதியாக விற்பனைகளில் ஈடுபடுவோர்**

உதாரணமாக, நிலவும் நிலைமை காரணமாக மீன், மரக்கறிகள், பழங்கள் வியாபாரத்தில் ஈடுபட முடியாத நிலையேற்பட்ட நபர்கள், சமயஸ்தலங்கள் சார்ந்து மற்று தனிப்பட்டரீதியாக அதனையொத்த தொழில்களில் ஈடுபட்டு வாழ்க்கையை நடாத்திச் செல்வோர் போன்ற தொழில்களில் ஈடுபடுவோர்

04. இதற்கு மேலதிகமாக, ஏலவே மத்திய அரசினால் அல்லது மாகாண சபைகளினால் விதந்துரைத்து அனுப்பியுள்ள முன்பள்ளி ஆசிரியர்கள், தனியார் பேரூந்துச் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள், அரச சேவையில் ஈடுபடாத ஆயர்வேத மருத்துவ சபையில் பதிவுசெய்துள்ள மருத்துவர்கள், கைவினைஞர்கள், கைத்தறி புடவைக் கைத்தொழிலாளர்கள், நீதிமன்றங்கள் மூலம் பராமரிப்புக் கொடுப்பனவைப் பெறும் பெண்கள், வருமானத்தை இழந்த சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் மற்றும் பிரதேச ஊடகவியலாளர்கள் ஆகிய தொழில் பிரிவுகளைச் சேர்ந்த குடும்ப அலகுகளையும் இந்தக் கொடுப்பனவைச் செலுத்துவதற்காக காத்திருப்புப் பட்டியல்களில் உள்ளடக்க வேண்டும்.

05. தகுதி பெறும் பயனாளிகள் ஒருவருக்கு மேல் ஒரு குடும்ப அலகில் காணப்படும் சந்தர்ப்பத்தில், ஒரு குடும்ப அலகிற்கு ஒரு தடவை மாத்திரம் செலுத்தப்படும் கொடுப்பனவாகக் கருதி செயற்பட

வேண்டும். அத்துடன், பயன்களைச் செலுத்தும்போது அந்தக் குடும்ப அலகுகள் இந்த சமூக நன்மைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வேறு கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொள்ளவில்லை என்ற சான்றிதழை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்குறிப்பிட்டவாறு பயனாளிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட குடும்ப அலகுகளின் எண்ணிக்கைரீதியான விபரங்களை மாவட்டச் செயலாளர் ஊடாக தாமதமின்றி மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

06. இந்தப் பயனாளிகளைத் தெரிவுசெய்யும் செயல்முறையை 2020 ஏப்ரல் மாதம் 17, 18 ஆந் திகதிகளில் ஆரம்பித்து, 2020 ஏப்ரல் 19 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிராமியக் குழுவின் விதந்துரையுடன் பிரதேச செயலாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும். சுகாதாரப் பிரிவினர் வழங்கும் அறிவுறுத்தல்கள் மற்றும் விதந்துரைகளைப் பின்பற்றி, இந்தக் கொடுப்பனவுகளை 2020 ஏப்ரல் மாதம் 20, 21, 22 ஆகிய மூன்று தினங்களினுள் செலுத்தி முடிக்க வேண்டும்.

07. தற்போது ஏற்பட்டுள்ள முக்கியமான நிலைமையில் இலங்கை மக்கள் பொதுவான சமூக வாழ்வினை இயல்பாக நடாத்திச் செல்வதற்காக நீங்கள் ஆற்றும் பணி தொடர்பாக எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**காமினீ எஸ். செனரத்**

பிரதம அமைச்சரின் செயலாளர்
பிரதான வழிநடாத்தல் அதிகாரி – அத்தியாவசிய பொதுச் சேவைகளைத் தொடர்ச்சியாக வழங்குவதனை வழிநடாத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஜனாதிபதி செயலணி

பிரதிகள்:

01. ஜனாதிபதியின் செயலாளர்
02. அமைச்சரவையின் செயலாளர்
03. கணக்காய்வாளர் நாயகம்

— தயவுடன் தகவலுக்காக

04. செயலாளர், நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
05. செயலாளர், அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
06. செயலாளர், மகளிர் மற்றும் சிறுவர்கள் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சு

— தேவையான நடவடிக்கைகளுக்காக

இணைப்பு 01

<u>நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு ஏற்ப வாழ்வாதாரம் இழந்தமையினால் அரசாங்கத்தினால் வழங்கப்படும் ரூ.5000/- கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்</u>

1. வீட்டுத் தலைவரின் பெயர் :
2. குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை :
3. தேசிய அடையாள அட்டை இலக்கம்:
4. பிறந்த திகதி :
5. நிரந்தர வதிவிட முகவரி :
6. பிரதேச செயலகப் பிரிவு :
7. கிராம உத்தியோகத்தர் பிரிவு :
8. வீட்டு இலக்கம் :
9. செய்த தொழில் :
10. அந்த தொழில் தொடர்பாக பதிவுசெய்யப்பட்டிருப்பின், பதிவிலக்கம்:
11. பதிவுசெய்த நிறுவனம் :
12. அரசாங்கத்திடம் ரூ.5000/- கொடுப்பனவைக் கோருவதற்கான காரணம்:

............................................................................................................................
............................................................................................................................
............................................................................................................................

மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி :

........................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

***<u>அலுவலகப் பாவனைக்கு</u>***

.................................... பிரதேச செயலகப் பிரிவின் ................................ கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும்.......................... ஆகிய நான், 2020.04....... ஆந் திகதி கொரோனா வைரஸ் பரவலின் காரணமாக தொடர்ச்சியாக ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்மையினால் வாழ்வாதாரம் இழந்த குடும்ப அலகொன்றுக்கு அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, அரசாங்கத்தினால் வழங்கப்படும் ரூ. 5000/= கொடுப்பனவைப் பெற்றுக்கொண்டேன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

..............................................

பெற்றுக்கொண்டேன் என்பதற்கான
விண்ணப்பதாரியின் கையொப்பம்

சாட்சிகள்:

01. கிராம உத்தியோகத்தர் பெயர்..................... கையொப்பம்..................
02. சமூர்த்தி அபி. உத்தியோகத்தர் பெயர்..................... கையொப்பம்...............

திகதி: